சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.21.07.2026.
OS.No. 46/2019
PW 2 ( மறு அழைப்பு ) : மணிவேல் (வயது 50 ) த/பெ.மருதை
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
( இ.ம.எண்.4/2025, 5/2025 மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு கு.வி -க்கு அனுமதிக்கப்படுகிறார் )

**பிரதிவாதி தரப்பு கு.வி**

நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். என்ன வழக்கிற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று எனக்கு தெரியும். என்ன வழக்கு என்றால் எனது அண்ணன் நாகேஸ்வரன் மகள் திருமணத்திற்கு பர்னிச்சர் வாங்குவதற்கு கடனுக்கா ஜாமின் கையெழுத்து போடுமாறு கேட்டார். எங்கு கையொப்பம் செய்தேன் என்றால் பாலாஜி ஹோட்டலுக்கு மேல் மாடியில். எனக்கு அவ்வளவாக எழுத படிக்க தெரியாது. நான் இலால்குடி சார்பதிவு அலுவலகத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை.

எனது அண்ணன் நாகேஸ்வரன் யாரிடம் பணம் வாங்கினார் என்றால் பெயர் தெரியாது. சிறுதையூர் உரக்கடைக்கு அருகில் உள்ள ஜெயம் பர்னிச்சர் கடையில் ஜாமான் வாங்கியதற்கு கையொப்பம் செய்யுமாறு சொன்னார். எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் பாலாஜி ஹோட்டல் மேல் மாடியில் பத்திர எழுத்தர் பெயர் தெரியாது அவர் சொன்ன இடத்தில் கையொப்பம் செய்தேன். எவ்வளவு கடன் வாங்கினேன் என்று எனது அண்ணன் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை.

**ம.வி** -இல்லை.

/ signed/
மணிவேல்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.07.21 18:14:13 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி